1967 ஜுலை 11]

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) & (இ) சென்னை நகரில் தற்போது திருத்தியமைக்கப்பட்ட உருக்கி நோய் ஒழிப்புத் திட்டம் (Tuberculosis Eradication Programme செயல்பட்டு வருகிறது. பதினென்கு உருக்குநோய் ஆய்வு நிலையங்களும், சிகிச்சை நிலையங்களும் திறக்கப்பட்டுள்ளன. இந்த நிலையங்கள் ஆற்றும் பணியில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. தேவையானபோது, மேலும் உருக்கி நோய் ஆய்வு நிலையங்கள் ஏற்படுத்தப்படும்.

திரு. கே. விநாயகம் : ஐயா, இந்த க்ஷயரோக வியாதி ஒரு பெரிய வியாதியாக இருப்பதால் க்ஷயரோக ஆஸ்பத்திரிகளில் க்ஷயரோக வியாதியஸ்தர்களுக்கு பெட் வசதிகள் போதுமான அளவு இல்லாத காரணத்தினல் அவர்கள் தங்களுடைய பெயர்களை ரிஜிஸ்டர் செய்துகொண்டு அவரவர்களுடைய முறை வரும்போதுதான் அவர்களுக்கு கார்டுகள் அனுப்பப்படுகின்றன. பெரும்பாலும் அந்த வியாதியஸ்தர் இறந்துபோன பிறகுதான் சிகிச்சைக்கு வரலாம் என்ற கார்டு வருகிறது என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? இனியாகிலும் அவர்கள் இறப்பதற்கு முன்னலேயே வந்து சிகிச்சை பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் அதிகப்படியான க்ஷயரோக ஆஸ்பத்திரிகள் சென்னையிலே ஏற்படுத்த உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : கனம் உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவதுபோல் புகார் ஒன்றும் வரவில்லை. அவர்கள் ஆட்சியில் அப்படி இருந்திருக்கலாம், இந்த ஆட்சியில் அப்படி நடக்காமல் பார்த்துக்கொள்வோம்.

மாவட்ட நகராட்சிகள் சட்டம்

*263 வின—**திரு. வி. கே. கோதண்டராமன் :** மதிப்பிற்குரிய தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நகரசபை சட்டத்தை திருத்தும் விஷயம் தற்போது எந்த நிலையிலுள்ளது ?

(இ) இந்த முயற்சி எந்த ஆண்டில் எடுக்கப்பட்டது ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) தமிழ்நாடு 1920-ம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தை ரத்து செய்து, அதை மீண்டும் சட்டமாக இயற்றும்பொருட்டு முந்திய சட்டசபையில் தமிழ்நாடு 1966-ம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் மசோதா (3—8—1966-ல்) கொண்டுவரப்பட்டது. இது குறித்து அச்சட்டசபை நிறைவேற்றிய ஒரு பிரேரணையின்மேல், பொதுமக்கள் அம்மசோதா மீது தங்கள் கருத்துக்களை 31—10—1966-க்குள் தெரிவிப்பதற்காக அது தமிழ்நாடு அரசாங்க இதழில் வெளியிடப்பட்டது. முந்திய சட்டசபை கலைக்கப்பட்டதன்மேல்,

அம்மசோதா காலங்கடந்ததாகிவிட்டது. அம்மசோதாவை மீண்டும் கொண்டு வருவதற்காக, புதிதாக நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டியுள்ளன.

(இ) 1946-ம் ஆண்டிலிருந்து இந்த முயற்சி எடுக்கப்பட்டது.

திரு. வி. கே. கோதண்டராமன்: சார், 1946-ம் ஆண்டிலிருந்து இதற்காக முயற்சி எடுத்துக்கொண்டிருந்தபோதிலும் 1960-ஆம் ஆண்டிலே இந்த முயற்சி எடுக்கப்பட்டு அதற்காக கமிட்டி அமைக்கப்பட்டு பிறகு 1961-ஆம் ஆண்டிலே தேர்தல் வருவதற்கு மூன்று மாதங்களுக்கு முன்னாலே அதை அடுத்த அரசாங்கம் வந்து கவனித்துக்கொள்ளட்டும் என்று பிறகு விட்டுவிட்டார்கள். இப்படியே அது ஒவ்வொரு முறையும் விடப்பட்டு வருகிறது. தொடர்ந்து பல ஆண்டுக்காலமாக இப்படியே இருந்து வருகிறது. ஆகவே இனியாகிலும் தாமதப்படுத்தாமல் எத்தனை வருட காலத்திற்குள் இதைக் கொண்டுவருவதாக உத்தேசம் இருக்கிறது?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: இந்தச் சட்டத்தைத் திருத்துவதற்கு இப்பொழுது முயற்சிகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மிக விரைவாகவே சட்டத்தை அமல்படுத்துவதற்கு முயற்சிகள் எடுக்கப்படும்.

THIRU K. VINAYAKAM: Sir, in view of the rich experience gained by working out the various Acts, we have found out many defects in these Acts. So will the Government take steps to repeal all the existing Acts and then formulate a new comprehensive Act instead, for different subjects relating to Panchayat Unions, Municipalities including Corporation?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: ஒரு காலத்திலே நல்லது என்று எடுத்துக்கொள்ளப்படுவது காலப் போக்கிலே பயன்படாத்தக்கதாக இல்லையென்ற நிலை இருப்பதாலே முழுமையாக நீக்கப்பட்டாலும், அதற்கு மறுபடியும் சிலபல திருத்தங்கள் கொண்டு வரப்படவேண்டியிருக்கும். ஆகவே நல்ல அம்சங்களை எடுத்துக் கொண்டு புதிதாக தேவைக்கேற்ப நல்ல அம்சங்களைச் சேர்த்து ஒரு நல்ல சட்டத்தை மேற்கொள்ளுவதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

* 264 Q.—THIRU K. VINAYAKAM: THIRU R. R. MUNISWAMY: } Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) whether there is any proposal to amend the Local Bodies Acts (Panchayats Act, Panchayat Union Act, Municipalities Act, Corporation Act) to confer more powers on local bodies; and

(b) if so when and how.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: (அ) & (இ) பஞ்சாயத்துக்களுக்கும், பஞ்சாயத்து ஒன்றிப்புகளுக்கும் அதிக அதிகாரம் அளிக்கும் வகையில், தமிழ்நாடு 1958-ம் ஆண்டு பஞ்சாயத்துச்